அரசு பாலிடெக்னிக்குகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் பணி

* 189 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அரசாங்க பாலிடெக்னிக்குகளில், 1968–69-ல் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியாற்ற அரசு நியமித்திருக்கிறதா?

(இ) ஆம் என்றால், எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. பா. சாரதி: தலைவரவர்களே, தமிழகத்திலிருக்கும் பாலிடெக்னிக்குகளில் இருக்கும் மாணவர்களுக்குத் தகுந்த முறையில் ஆசிரியர்கள் இல்லாமல் 250 மாணவர்கள் இருந்தால் 100 பேருக்கு மேல் ஆசிரியர்கள் இருக்கிறார்களே, இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்த பாலிடெக்னிக்கில் அப்படி இருக்கிறது என்று தெரியவில்லை. அதுபற்றிக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 190, 191 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

பொள்ளாச்சி–1 ரக நிலக்கடலை.

* 192 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"பொள்ளாச்சி–1" ரக நிலக்கடலை அதிக அளவில் பயிரிட திட்டம் ஏதேனும் தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி (டாக்டர்) சத்தியவாணிமுத்து: அரசு அண்மையில் ஒப்பளித்துள்ள நிலக்கடலை மூலவித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின் கீழ், தென்காசிக் கோட்டத்தில் 300 ஏக்கர் பரப்பிலும், குடுமியாமலையில் 400 ஏக்கர் பரப்பிலும் "பொள்ளாச்சி-1" ரக நிலக்கடலைப் பெருக்கப் பணியை வேளாண்மைத்துறை மேற்கொள்ளும்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிலக்கடலை ஒரு ஏக்கராவிற்கு எவ்வளவு விளைகிறது? இந்த நிலக்கடலையை மேலும் கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் தாலூக்காக்களில் அதிக அளவில் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

1970 செப்டம்பர் 2]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மூல வித்துக்கள் தேவைப்படுவது பற்றித்தான் இப்பொழுது கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது 1,300 மூட்டை வேர்க்கடலை மூல வித்துக்கள் தேவைப்படுகிறது. திண்டிவனத்திலுள்ள வேர்க்கடலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 30 முதல் 50 மூட்டைகளுக்கு மேல் கிடைப்பதில்லை. அதற்காகத்தான் தென்காசிக் கோட்டத்தில் 300 ஏக்கர் பரப்பையும், குடுமியாமலையில் 400 ஏக்கர் பரப்பையும் எடுத்து 3,00,900 ரூபாய் மதிப்பீட்டில், அதிகப்படியான வித்துக்கள் கிடைக்க பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிகப்படியான வித்துக்களைத் தயார் செய்த பிறகு அதிகப்படியான இடங்களில் பயிரிடுவதைப் பரிசீலிக்கலாம்.

திரு. வி. டி. அண்ணாமலை: தலைவரவர்களே இந்த பொள்ளாச்சி-1 ரக நிலக்கடலை வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை வட்டாரப் பகுதியில் பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அதற்காகத் தனியாக நியமிக்கப்பட்ட அதிகாரி கோருகின்ற கடன்களைக் கொடுக்காததன் மூலம் பொள்ளாச்சி–1 வேர்க்கடலை பயிரிடுவதற்கு உதவாமல் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மூலக் கேள்வியை விட்டு மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கோ செல்கிறார்கள். எனவே, தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதிலைத் தரலாம்.

திரு. க. ர. நல்லசிவன்: இந்தக் கடலை ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கிலோகிராம் கிடைக்கிறது? மேலும், இது நீர்ப்பாசனத்தின் கீழ் வரும் கடலையா அல்லது மழையின் மூலம் பயிர் செய்வதன் கீழ் வருவதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அது பற்றிச் சரியான விவரம் இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, பொதுவாக இந்தக் கடலையின் விலை குறைவாக இருப்பதால், கடலை எண்ணெயின் விலை அதிகமாக ஏறியிருப்பதால், இந்த பொள்ளாச்சி–1 ரக நிலக்கடலையைத் தமிழகம் முழுவதும் பயிர் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் முதலிலேயே சொன்னேன், போதுமான வித்துக்கள் கிடைக்கவில்லை. குறிப்பாக பொள்ளாச்சி–1 ரக நிலக்கடலைக்குப் போதுமான வித்துக்கள் இல்லை. எனவே, அந்த நிலக்கடலைக்கான மூல வித்துக்களை உற்பத்தி செய்வதிலே இப்பொழுது அரசாங்கம் அதிக நாட்டம் செலுத்துகிறது. தேவையான அளவிற்கு நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் வேறு ரக நிலக்கடலை ஏற்கெனவே பலயிடங்களில் பயிரிடப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவரவர்களே, 3 லட்சம் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தென்காசியிலே இனிமேல்தான் ஆரம்பிக்கப்போவதாக விவரம் தெரிகிறது. எனவே, ஆரம்பிக்கப்போவதற்கு அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது செலவு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தென்காசிக் கோட்டத்திலும், குடுமியா மலையிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட அரசாங்கம் ஒப்புதல் அளித்து, நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது .

கோவை நகரில் அரிசனங்களுக்கு நெருப்பு பிடிக்காத வீடுகள்

* 193 வினா—திரு. எம். பூபதி : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் வசதியின்றி குடிசைகளிலேயே வாழும் சுமார் 4,000 அரிசன குடும்பங்களுக்கு தமிழக அரசு நெருப்புப் பிடிக்காத வீடுகள் கட்டிக்கொடுக்க உத்தேசம் உண்டா?

(இ) இல்லையெனில், ஸ்டேட் ஹவுசிங் போர்டார் கோவையில் கட்டிக் கொடுத்துள்ளது போல் குடியிருப்பிற்கு வகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) அரிசன நலத் துறையைப் பொறுத்தமட்டில் குறைந்த மதிப்பீட்டில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரும் திட்டம் நடைமுறையில் உள்ளது. அது தவிர, மாநில வீட்டு வசதி வாரியம் கோவை நகரில் சில பகுதிகளில் வாழும் அரிசனங்கள் உள்பட மற்றும் குடிசை மக்களுக்காக 1,939 அங்கணங்கள் கட்டியுள்ளது. மேலும் வீட்டு வசதி வாரிய சேரி மாற்றத் திட்டத்தின் கீழ், நிதி நிலைமைக்கு ஒப்ப அதிகமான வீடுகள் படிப்படியாகக் கட்டித் தர கோவை வீட்டு வசதிப் பிரிவு திட்டங்கள் வகுத்துள்ளது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, கோவை நகரில் மிக அதிகமான இட நெருக்கடி இருப்பதாலும் அதே நேரத்தில் அரிசன மக்கள், அங்கேயே தங்கள் வேலையை உத்தேசித்து கோவையிலேயே இருக்க வேண்டியிருப்பதால் சர்க்காருக்குச் சொந்தமான இடத்திலே, அவர்களுக்கு மாடி வீடுகள் கட்டி அவர்கள் குடியிருக்க ஒரு ரூபாய் வாடகைக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது ஏற்கெனவே 1,939 அங்கணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அதிலும் குறிப்பாக உக்கடம், கள்ளமேடு, லிங்கிகவுண்டர் தோட்டம், பாளையன் தோட்டம் என்ற இடங்களிலே கட்டப்பட்டு பத்து ரூபாய் வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே லிங்கிகவுண்டர் தோட்டத்தில் 14.34 இலட்சமும், பேரூர்